**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.97/2023**

2025 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 2.09.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பழனிவேல் (PW–2 ) | வயது | : | 65 /2025 |
| த/க பெயர் | : | திரு. மாரியப்பன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பள்ளிசந்தம் | வட்டம் | : | திருத்துறைப்பூண்டி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தார் என்றால் வாதி நடராஜன் அழைத்து வந்தார். நான் தாவா சொத்தின் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு குத்தக பாத்திய உரிமை சந்தானம் மகன் ஆதித்தன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்நாள்வரை சாகுபடி ஆதித்தன் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.
2) ஆதித்தன் வாதி நடராஜன் பெயருக்கு எந்த வித சரண்டர் பத்திரமும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதாக வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து பிரதிவாதியானவர் வாதியிடம் எந்தவித தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.08 17:52:31 +0530

District Munsif
Mannargudi.